# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 93 | 4 Pages | 05.11.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 93 | 4 பக்கங்கள் | 05.11.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## நேபாளம் நிலநடுக்கம் பலி எண்ணிக்கை 157ஆக உயர்வு



நேபாளம், நவ.5

நேபாளத்தின் வடமேற்கு மாவட்டங்களில் நேற்று நள்ளிரவு ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தில் 69 பேர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க புவியியல் மையம், நிலடுக்கம் முதற்கட்ட அளவில் 5.6 ரிக்டர் பதிவானதாகவும், 11 மைல் ஆழத்தில் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. அதன்பின் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தின் நிலநடுக்கம் கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி தேசிய மையம், நேபாளம் தலைநகர் காத்மாண்டில் இருந்து 250 மைல் தூரத்தில் உள்ள ஜாஜர்கோட், நிலநடுக்கத்தின் மையப்புள்ளியாக இருந்தது எனத் தெரிவித்துள்ளது.

ருகும் மாவட்டத்தில் குறைந்தது 35 பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளன. காயம் அடைந்த 30க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஜாகர்கோட் மாவட்டத்தில் 34 பேர் உயிரிழந்ததை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்னர்.

தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் இல்லாததால் மீட்புப்பணியில தடை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், பல இடங்களில நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட இடத்தை நெருங்க முடியவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேபாளத்தில் 89 பெண்கள் உள்பட 157 பேர் உயிரிழந்துள்ளனர். பலி எண்ணிக்கை உயர்ந்துள்ள நிலையில் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், 190 பேர் படுகாயமடைந்துள்ளனர். மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## சுதந்திர பாலஸ்தீனத்தில் காசா ஒரு பகுதியாக வேண்டும்: எர்டோகன் திட்டவட்டம்



துருக்கி, நவ.5

தென் கிழக்கு ஐரோப்பாவிற்கும் மேற்கு ஆசியாவிற்கும் இடையே அமைந்துள்ள அரபு நாடு துருக்கி (Turkey). இதன் தலைநகரம் அங்காரா.

துருக்கியின் அதிபராக ரிசெப் டாய்யிப் எர்டோகன் (Recep Tayyip Erdogan) 2014லிருந்து பதவியில் உள்ளார். தற்போது தீவிரமாக நடைபெற்று வரும் இஸ்ரேல்ஹமாஸ் போரில் ஹமாஸ் அமைப்பினரை ஆதரிப்பவர் எர்டோகன்.

இந்த போர் குறித்து அவர் தெரிவித்ததாவது:

காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்துகிறோம். இந்த போர் முடிந்ததும் காசாவில் அமைதியையும், அது ஒரு சுதந்திர பாலஸ்தீனதின் ஒரு பகுதியாகவும் இருப்பதை பார்க்க விரும்புகிறோம். கிழக்கு ஜெருசலேம் நகரை தலைநகராக கொண்டு 1967ல் வகுக்கப்பட்ட எல்லைகளே அங்கு இருக்க வேண்டும். பாலஸ்தீனர்களின் வாழ்வை இருள செய்யும் எந்த முடிவையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். இது குறித்த பேச்சு வார்த்தைகளில் துருக்கி ஈடுபட்டாலும், நேதன்யாகுவை ஆதரிக்க போவதில்லை. இஸ்ரேல் நடத்திய போர் குற்றங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் இஸ்ரேலை பொறுப்பாக்குவோம். இஸ்ரேலை ஆதரித்ததன் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் எங்கள் நம்பிக்கையை இழந்து விட்டது.

இவ்வாறு எர்டோகன் கூறினார்.

## ஏழை சிறுவனின் பிறந்தநாளை கொண்டாடிய பள்ளி மாணவர்கள்



டெல்லி, நவ.5

பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது. குறிப்பாக பள்ளி செல்லும் குழந்தைகள் பிறந்தநாளன்று புதிய ஆடை அணிந்து பள்ளிக்கு சென்று சக மாணவ மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்பு கொடுத்து கொண்டாடுவது அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தும். ஆனால் இவையெல்லாம் ஏழை மாணவர்களுக்கு நினைத்து பார்க்க முடியாததாகவே உள்ளது.

இந்நிலையில்ஒருஏழைசிறுவனின் பிறந்த நாளை சக மாணவர்கள் பள்ளி வகுப்பறையில் கொண்டாடிய வீடியோ இணையத்தில் வைரலாக பயனர்களின் இதயங்களை கவர்ந்துள்ளது. கொலம்பியாவின் எபிஜிகோ பகுதியை சேர்ந்த சிறுவன் ஏஞ்சல் டேவிட். 8 வயதான இந்த ஏழை சிறுவன் இதுவரை பிறந்தநாளை கொண்டாடியது கிடையாது.

இந்நிலையில் அவனது 8வது பிறந்தநாளை அறிந்த பள்ளி ஆசிரியர் காசாஸ் சிமெனா அந்த சிறுவனுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் வகையில் வகுப்பறையில் பிறந்தநாளை கொண்டாட திட்டமிட்டார்.

அதன்படி சிறுவன் டேவிட் வகுப்பறைக்கு வந்த போது சக மாணவர்கள் அவரை கைதட்டி, பிறந்தநாள் வாழ்த்து, பாட்டு பாடி வரவேற்றுள்ளனர். மேலும் வகுப்பறையில் பலூன்கள் கட்டி, அலங்காரம் செய்து சிறுவனின் பிறந்தநாளை கொண்டாடிய வீடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுள்ளது. 10 லட்சத்திற்கும் அதிகமான விருப்பங்களை பெற்ற இந்த வீடியோவை பார்த்த பயனர்கள் பலரும் சிறுவனின் ஆசிரியர் மற்றும் சக மாணவர்களை பாராட்டி கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

# தி.மு.க. சென்னை மண்டல வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்: முதல்வர் தலைமையில் நடக்கிறது



சென்னை, நவ.5

பாராளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற இருப்பதையொட்டி தி.மு.க.வில் தேர்தல் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. இதையொட்டி வாக்குச்சாவடி பொறுப்பாளர்களாக கட்சியில் தீவிரமாக பணியாற்ற கூடியவர்களை நியமித்துள்ளனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வாக்காளர்களை சந்தித்து ஓட்டு கேட்கவும், தேர்தல் பணியாற்றவும் 21 பேர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். சில மாவட்டங்களில் 31 பேர் வரை வாக்குச்சாவடிக்கு நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

இந்த பூத் ஏஜெண்டுகள் மூலம் தான்தேர்தலின்போதுவிண்ணப்பம் கொடுக்கப்படும். இதனால் இப்போதே தேர்தல் பணிக்கு தயாராகி வருகிறார்கள்.

அந்த வகையில் பாக முகவர்கள் கூட்டம் சட்டமன்ற தொகுதி வாரியாக ஏற்கனவே நடத்தப்பட்டு உள்ளது. இதில் மேலிட பார்வையாளர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி வருகிறார்கள்.

இதேபோல் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் மண்டல அளவில் பாக முகவர்கள், கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தி வருகிறார். ஏற்கனவே திருச்சி, ராமநாதபுரம், காங்கேயம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் மண்டல கூட்டங்கள் நடைபெற்று உள்ளன.

இப்போது தி.மு.க. சென்னை மண்டல வாக்குச்சாவடி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று திருவள்ளூர் கலைஞர் திடலில் நடக்கிறது. இதில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ளடங்கிய 11 தி.மு.க. மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கிறார்கள்.

இதில் சென்னை ஒருங்கிணைந்த தி.மு.க. 6 மாவட்டங்கள் மற்றும் காஞ்சிபுரம், வடக்கு, தெற்கு மாவட்டங்கள், திருவள்ளூர் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டங்களின் வாக்குச்சாவடி பாக முகவர்கள் 11569 பேர் (பி.எல்.ஏ.2) கலந்து கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சி காலை 9 மணி முதல் நடைபெற உள்ளது. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் எம்.எல்.ஏவுமான வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசு, மா. சுப்பிரமணியன், ஆவடி சா.மு. நாசர், சுந்தர், பி.கே.சேகர்பாபு, மாதவரம் எஸ்.சுதர்சனம், டி.ஜே. கோவிந்தராஜன், நே.சிற்றரசு, மயிலை வேலு, தா.இளைய அருணா ஆகியோர் பங்கேற்கின்றனர். மாலை 4 மணியளவில் தமிழ் நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு கட்சியினருக்கு வரும் பாராளுமன்ற தேர்தல் எவ்வளவு முக்கியம், வாக்குச்சாவடி முகவர்கள் எப்படி செயல்பட வேண்டும், சமூக வலைதள பயன்பாட்டின் முக்கியத்துவம், தி.மு.க. அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க எடுத்துரைக்க உள்ளார்.

## திருப்பூர் விகாஸ் வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் வண்ண மலர்கள் தினம் கொண்டாட்டம்



திருப்பூர், நவ.5

திருப்பூர் விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூலிப்பாளையம்பள்ளிவளாகத்தில் மழலையர்மாணவர்கள்கண்களுக்கு களிப்பூட்டும் வண்ண மலர்கள் தினம் கொண்டாடினர். இதில் மழலை மலர்கள் வண்ண உடை உடுத்தி, மலர்களாக வகுப்பறையில் அமர்ந்து இருந்தனர். இதில் பள்ளி தாளாளர் ஆண்டவர் ராமசாமி, பொருளாளர் ராதா ராமசாமி, பள்ளிமுதல்வர் அனிதா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களிடையே உரையாற்றினர்.

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் தொடங்கியது

திருப்பூர், நவ.5

திருப்பூர் மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த மாதம் 27ந் தேதி வெளியிடப்பட்டது. இன்று (சனிக்கிழமை) வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்வது தொடர்பாக சிறப்பு முகாம் தொடங்கியது. நாளை (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் வருகிற 18ந் தேதி, 19ந் தேதிகளில் 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

வருகிற ஜனவரி மாதம் 1ந் தேதி அன்று 18 வயது பூர்த்தியடையும் வாக்காளர்களும் மற்றும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 1ந் தேதி ஜூலை மாதம் 1ந் தேதி, அக்டோபர் மாதம் 1ந் தேதி 18 வயது பூர்த்தியடையும் வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான படிவம் 6ஐ பூர்த்தி செய்து முன்னதாகவே அளிக்கலாம். மேற்படி முன்னதாக வரப்பெற்ற படிவங்கள் சேர்க்கப்பட்டு அவை அந்தந்த காலாண்டின் தொடக்கத்தில் அதாவது ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாத வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும்.

சிறப்பு முகாம் நடக்கும் நாளன்று வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளில் திருத்தம் செய்ய விரும்புவோர், ஒரே தொகுதிக்குள் குடியிருப்பு மாறியவர்கள், முகவரி மாற்றம் செய்வது போன்ற கோரிக்கைகள் தொடர்பாக படிவம் 8ஐ விண்ணப்பிக்கலாம்.

பெயர்நீக்கம்செய்யவிரும்புவோர் படிவம் 7ஐ விண்ணப்பிக்க வேண்டும்.

இதுதவிர https://voters.eci.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், Voter Helpline App என்ற செயல்போன் செயலி மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு 0421 2971110, கட்டணமில்லா தொலைபேசி 1950 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம். தாராபுரம், காங்கயம், அவினாசி, திருப்பூர் வடக்கு, பல்லடம், உடுமலை, மடத்துக்குளம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு அந்தந்த தாசில்தார்கள் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்களாகவும், திருப்பூர் தெற்கு தொகுதிக்கு மாநகராட்சி உதவி ஆணையாளர், உதவி வாக்காளர் பதிவு அலுவலராகவும் உள்ளனர். இதுதவிர தாராபுரம், காங்கயம் தொகுதிக்கு தாராபுரம் ஆர்.டி.ஓ., அவினாசி, திருப்பூர் வடக்கு, பல்லடம் தொகுதிக்கு திருப்பூர் சப்கலெக்டர், திருப்பூர் தெற்கு தொகுதிக்கு மாநகராட்சி ஆணையாளரும், உடுமலை, மடத்துக்குளம் தொகுதிக்கு உடுமலை ஆர்.டி.ஓ.வும் வாக்காளர் பதிவு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த தகவலை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

## உடுமலை அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கலெக்டர் ஆய்வு





உடுமலை, நவ.5

திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை வட்டம், குடிமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை, சங்கரமாநல்லூர் அரசு தோட்டக்கலை பண்ணை, உடுமலைப்பேட்டை பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் கலெக்டர் கிறிஸ்துராஜ் ஆய்வு செய்தார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது: உடுமலைப்பேட்டை அமராவதி சர்க்கரை ஆலையின் செயல்பாடுகள் குறித்தும், ஆலையின் பராமரிப்பு, அரவைத்திறன், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, விவசாய பரப்பளவு உள்ளிட்டவைகள் குறித்தும் மற்றும் அமராவதி சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் உற்பத்தி திறன் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, ஆலையை நன்கு பராமரித்து உற்பத்தி திறனை அதிகரிக்க இந்த ஆய்வின்போது அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் மடத்துக்குளம் வட்டம், சங்கராமநல்லூரில் தோட்டக்கலைத்துறையின் அரசு தோட்டக்கலைப் பண்ணை 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பண்ணையில் நமது மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான தோட்டக்கலைத்துறையின் மூலம் வழங்க வேண்டிய காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தாய்செடிகள்பராமரிக்கப்பட்டு வரும் இடங்களையும் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படும் நிழல்வலை கூடாரங்களையும் குழுத்தட்டு நாற்றுகளையும் ஆய்வு மேற்கொண்டும், பண்ணையில் மூன்று ஏக்கர் பரப்பளவில் மா கொய்யா மாதுளை மற்றும் எலுமிச்சை போன்ற பல செடிகளின் தாய் செடிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஓர் இரண்டு ஆண்டுகளில் இந்த தாய் செடிகளை ஆதாரமாகக் கொண்டு பல செடி நாற்றுகள் ஒட்டு கட்டுதல் முறையில் பதியன் போடுதல் முறையிலும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், தற்பொழுது உள்ள நிழல்வளை கூடார அமைப்பினை பயன்படுத்தி தோட்டக்கலை துறையின் மானிய த்திட்டங்களுக்கு தேவையான காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் சுமார் 400 எக்டர் பரப்பளவுக்கு தேவையான காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே உள்ள நீர் ஆதாரங்களுடன் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும் பண்ணை பணியில் ஆர்வம் உள்ள பணியாளர்களை சேர்த்தும் பண்ணையின் உற்பத்தியினையும், நாற்றுகளின் தரத்தையும் அதிகரிக்கு மாறு தோட்டக்கலைதுறையினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, உடுமலைப்பேட்டை நகராட்சியில் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளைவிரைந்து முடித்து பொதுமக்களுக்குவழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# மின் கட்டண உயர்வால் பல்லடத்தில் விசைத்தறி உற்பத்தி குறைப்பு



பல்லடம்:, நவ.5

திருப்பூர், கோவை மாவட்டங்களில், விசைத்தறிஜவுளிஉற்பத்தி தொழில் பரவலாக நடந்து வருகிறது. இவற்றில், தினமும்ஒருகோடிமீட்டர் காடா துணிகள் உற்பத்தியாகின்றன. மின் கட்டண உயர்வு, மூலப் பொருள் விலை உயர்வு மற்றும் மார்க்கெட் மந்த நிலை உள்ளிட்ட காரணங்களால், சமீப நாட்களாக, விசைத்தறி தொழில் மிகவும் நலிவடைந்துள்ளது. மின் கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, காடா துணி உற்பத்தி சார்ந்த சிறு குறு தொழில் நிறுவனத்தினர், தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும், தமிழகஅரசு கண்டுகொள்ளாததால், தொழில்துறையினர் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து விசைத்தறி மேம்பாடு மற்றும்ஏற்றுமதிகவுன்சில் துணைத்தலைவர் சக்திவேல் கூறியதாவது: பஞ்சு, நூல் உள்ளிட்ட மூலப்பொருட்களின் தட்டுப்பாடு, விலை உயர்வு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை ஆகியவற்றால், தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் வழங்கப்பட்ட வங்கி கடனுக்கான வட்டி விகிதம், 6.25ல் இருந்து, 9.75 சதவீதமாக உயர்த்தப்பட்டதால், கடனை திருப்பி செலுத்த முடியாமல் பரிதவித்து வருகிறோம். இதுபோன்ற சூழலில், தமிழக அரசு, இதுவரை இல்லாத அளவு, 430 சதவீதம் மின் கட்டணம் உயர்த்தியுள்ளது தொழிலை மிகவும் பாதித்துள்ளது. மூலப்பொருட்களின் விலை உயர்வு, மின் கட்டணஉயர்வுஉள்ளிட்ட பல காரணங்களால், துணிகளின் விலையை நிர்ணயிக்க முடியாமல், 50 சதவீதம் மட்டுமே உற்பத்திநடந்துவருகிறது. உற்பத்தியை குறைத்துள்ளதால், தொழிலாளர்கள் பலரை பண்டிகைக்கு முன்னதாவே ஊருக்கு அனுப்பி விட்டோம். வரும் நாட்களில், மீதமிருக்கிற தொழிலாளர்களும் சொந்த ஊர் செல்வதால், தீபாவளி பண்டிகைக்குப் பின் தொழிலின் நிலை எவ்வாறு இருக்கும் என்று கணிக்க முடியாத சூழல் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.





அமைச்சர்சாமிநாதன்திருப்பூர்மாவட்டம்காங்கேயம்ஊராட்சிஒன்றியம்மருதுறைஊராட்சிகே.ஜி.வலசுரோட்டில் நெய்யல் ஆற்றின் குறுக்கே நபார்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# டிசம்பர் மாதம் முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமையும் காய்ச்சல் நோய் தடுப்பு முகாம்

திருப்பூர், நவ.5

திருப்பூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையில், காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத்துறை துவக்கியுள்ளது. இதையொட்டி வருகிற டிசம்பர் மாதம் 31ந்தேதி வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், ஆரம்பசுகாதாரநிலையம், மேம்படுத்தப்பட்ட நிலையம், நகர்ப்புற நிலையஅளவில்காய்ச்சல் தடுப்பு முகாம் நடத்தப்படும். காய்ச்சல் பரிசோதனை செய்யப்பட்டு தேவையான மருந்து, மாத்திரை வழங்கப்படும். யாருக்காவது தொடர் காய்ச்சல் பாதிப்பால் அவதிப்பட்டால், அவர்களை அழைத்து, மருத்துவமனையில் தொடர் சிகிச்சை வழங்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என சுகாதாரத்துறை அறிவித்திருந்தது. இந்நிலையில், இந்த அறிவிப்பை மாற்றி, பொது சுகாதாரத்துறை உத்தரவுபிறப்பித்துள்ளது.

அதன்படி, இனி, ஞாயிற்றுக்கிழமைக்கு பதில், சனிக்கிழமையில் முகாம் நடக்கும். நடப்பு வாரம், 5ந் தேதிக்கு பதிலாக, இன்று காய்ச்சல் தடுப்பு முகாம் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, மாவட்ட சுகாதார பணிகள் துறை துணை இயக்குனர் ஜெகதீஷ்குமார் கூறுகையில், ஞாயிறன்று முகாம் நடத்தினால், அதற்கு அடுத்த நாள் (திங்கள்) டாக்டர், செவிலியர் குழுவுக்கு விடுமுறை அளிக்க வேண்டியுள்ளது. சனிக்கிழமை முகாம் நடத்தினால், அதற்கான அவசியம் இல்லை. எனவே சனிக்கிழமைக்கு காய்ச்சல் தடுப்பு முகாம் மாற்றப்பட்டுள்ளது என்றார்.





திருப்பூர் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர், ஆணையர் தொழில்நுட்பக்கல்வி இயக்கம் வீரராகவராவ் தலைமையில் கலெக்டர் கிறிஸ்துராஜ் முன்னிலையில் திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

# உடுமலை அமராவதி அணை கால்வாயை சீரமைக்க ரூ.4.92 கோடி ஒதுக்கீடு முழுமையாக சீரமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்



உடுமலை, நவ.5

திருப்பூர் மாவட்டம் உடுமலை அமராவதி அணையின் மூலமாக 54 ஆயிரத்து 637 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதில் புதிய ஆயக்கட்டு பாசனத்தின் கீழ் உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம் தாலுகாவில் 25 ஆயிரத்து 250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. புதிய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு 64 கி.மீ.,நீளம் உள்ள பிரதான கால்வாய் வழியாக நீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கால்வாய் அமைத்து 65 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் இரு புறமும் உள்ள கான்கிரீட் சிலாப்புகள், மடைகள் உடைந்தும், நீர் வீணாவது அதிகரித்துள்ளது. அதே போல் கால்வாய் செல்லும் வழியின் குறுக்கே, ஓடைகளில் மழை நீர் வெளியேறும் வகையில் அமைத்துள்ள சுரங்க வழித்தடங்கள் மற்றும் மேல் நீர் போக்கிகள் சிதிலமடைந்து அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது.

எனவே பிரதான கால்வாயை முழுமையாக புதுப்பிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் பிரதான கால்வாயில், பெருமாள்புதுார் முதல் சாளரப்பட்டி வரை 13.50 கி.மீ., நீளத்துக்கு புதுப்பிக்க 4.92 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், பிரதான கால்வாயில் அதிகம் சேதமடைந்துள்ள 13.50 கி.மீ., நீளம் உள்ள பகுதிகளில் 20 மதகுகள், 7 சுரங்க நீர் வழிப்பாதைகள், 2 மேல் நீர் போக்கி அமைப்புகள் மற்றும் கான்கிரீட் கரைகள் புதுப்பிக்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

டெண்டர் பணிகள் முடிந்து புதுப்பிக்கும் பணி விரைவில் துவங்கும் என தெரிவித்தனர்.

அமராவதி அணையில் துவங்கி 64 கி.மீ., துாரம் அமைந்துள்ள பிரதான கால்வாயில் பெரும்பாலான பகுதிகளில், கான்கிரீட் கரைகள் மண் கால்வாயாக மாறி, அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு வருகிறது.

மழை நீர் வெளியேறும் வகையில் கால்வாய் பகுதிகளில் 200க்கும் மேற்பட்ட சுரங்க நீர் வழித்தடங்கள் அமைந்துள்ள நிலையில், முறையான பராமரிப்பு இல்லாமல் வலுவிழந்து ஒவ்வொன்றாக உடைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. கால்வாயிலுள்ள பெரும்பாலான மடைகள், உடைந்து காணப்படுகிறது.

பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் கிராமங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் படிகளுடன் காணப்படும் கரைகளும் சிதிலமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் மட்டுமன்றி பொதுமக்களும் மிகவும் பாதித்து வருகின்றனர்.

எனவே முழுமையாக கால்வாயை புதுப்பிக்க அரசு நிதி ஒதுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# பாரதியார் பல்கலைக்கழகம் சார்பில் எம்.பில்., பி.எச்டி., படிப்புக்கான தேர்வு தேதி அறிவிப்பு




திருப்பூர், நவ.5

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் கீழ், எம்.பில்., பி.எச்டி., (பிரிவு 1) படிப்புக்கான தேர்வு 2024ஜனவரி 3, 5, 8 ஆகிய தேதிகளில் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தேர்வுக்கான விண்ணப்ப படிவத்தை பல்கலைக்கழக இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தேர்வுக்கான கட்டணத்தை நவம்பர் 17ந்தேதிக்குள் செலுத்தி பூர்த்தி செய்த விண்ணப்ப படிவத்தை தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை641046 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும், விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தை பார்க்கலாம்.

# அங்கக வேளாண்மை பயிற்சியில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

திருப்பூர், நவ.5

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் வருகிற 7ந் தேதி அங்கக வேளாண்மை பயிற்சி அளிக்கப்படவுள்ளது.இப்பயிற்சியில் அங்கக வேளாண்மை அடிப்படை, களை மேலாண்மை, அங்கக பூச்சிநோய் மேலாண்மை, உர நிர்வாகம், அங்கக சான்றிதழ், இடுபொருள் தயாரிப்பு, விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் உள்ளிட்டவை வல்லுநர்களால் கற்பிக்கப்படும். இதற்கு, பயிற்சி கட்டணமாக ஜி.எஸ்.டி., சேர்த்து 750 ரூபாய் செலுத்தவேண்டும். ஆர்வமுள்ள விவசாயிகள் 9486734404 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய குழுவின் சாதாரண கூட்டம் 6 மாதத்தில் அனைத்து சாலைகளும் புதுப்பிக்கப்படும்



பல்லடம், நவ.5

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய குழுவின் சாதாரண கூட்டம் ஒன்றிய குழு கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதற்கு ஒன்றிய குழு தலைவர் வக்கீல் எஸ். குமார் தலைமை தாங்கினார். ஒன்றிய ஆணையாளர் விஜயகுமார் வரவேற்று பேசினார். இதில் ஒன்றிய கவுன்சிலர்கள் லோகுபிரசாந்த், ஸ்ரீபிரியா, துளசிமணி, ராஜேஸ்வரி, கங்கா, சுப்பிரமணியம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தகூட்டத்தில்நடைபெற்ற விவாதம் வருமாறு: ஜோதிபாசு (இ.கம்யூ): தொங்குட்டிபாளையம் ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் பணி செய்யும் பயனாளிகளுக்கு கடந்த 12 வாரங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை. பெண்கள் மற்றும் வயதானவர்கள் பணம் இன்றி மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கே.ஆண்டிப்பாளையத்திலுள்ள அங்கன்வாடி பழுதடைந்து தற்போது அதை இடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அங்கன்வாடியில் உள்ள 15 குழந்தைகள் மாற்று இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எனவே புதிதாக அங்கன்வாடி கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். டி.ஆண்டிப்பாளையம் பகுதியில் உள்ள குட்டைகளை மேம்பாடு செய்ய வேண்டும். டி.ஆண்டிப்பாளையத்தில் ரேஷன் கடை கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கி தர வேண்டும்.

ஊராட்சியில் உள்ள அனைத்து தாழ்த்தப்பட்ட காலனி பகுதியில் அமைந்துள்ள கான்கிரீட் சாலைகள் பெயர்ந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந்த சாலைகளை சீரமைத்து தர வேண்டும். அத்திக்கடவுகுடிநீர்சரிவரகிடைப்பதில்லை. எனவே இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கிருஷ்ணாபுரத்திற்கு பஸ் வசதி செய்து தர வேண்டும்.

பாலகிருஷ்ணன் (தி.மு.க): தெற்கு அவினாசிபாளையத்தில் உள்ள மின் மயானத்திற்கு முன்புறமாக செல்லும் சாலையை கான்கிரீட் சாலையாக அமைத்து தர வேண்டும்.

வக்கீல்.எஸ்.குமார் (ஒன்றிய சேர்மன்): ஒன்றிய பகுதிகளில் பெரும்பாலும்பழுதடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கவுன்சிலரின் கோரிக்கையை ஏற்று தீபாவளிக்கு பின்னர் ரேஷன் கடை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். வாவிபாளையம், வடமலைபாளையம் மற்றும் தொங்குட்டிபாளையம் பகுதிகளில் பஸ் வசதி கேட்டுள்ளீர்கள்.

ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால் தற்போது ஆட்கள் தேர்வு பணி நடைபெறுவதாக தெரிவித்துள்ளனர். அதன் பின்னர்பஸ் வசதி செய்து தருவதாகவும் அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

முதலமைச்சரின்கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இன்னும் சுமார் ஒரு 6 மாத காலத்திற்குள்ளாக அனைத்து சாலைகளும் மேம்பாடு செய்து தரப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார். முடிவில் ஒன்றிய குழு துணை தலைவர் அபிராமி அசோகன் நன்றி கூறினார்.

# திருப்பூர் மாவட்டத்தில் 90 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தம்: சமூக நலத்துறை அதிகாரி தகவல்

திருப்பூர், நவ.5

திருப்பூர் மாவட்ட சமூக நலத்துறை, தோழமை அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்புகள் சார்பில், குழந்தைகள் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம் அவிநாசி ரோட்டில் உள்ள ஓட்டல் ஒன்றில் நடந்தது.

இதில், சமூக நலத்துறை அலுவலர் ரஞ்சிதா பேசியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் கடந்த ஒரு ஆண்டில் 111 குழந்தை திருமணங்கள் கண்டறியப்பட்டு, 90 திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. 13 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 6 வழக்குகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள் திருமணம் இல்லாத, மாவட்டமாக மாற்ற தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, அவர் பேசினார்.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் ரியாஸ் அகமது பாட்ஷா பேசியதாவது: புலம்பெயர் தொழிலாளர்கள் நிறைந்துள்ள மாவட்டத்தில் தொடர்ந்து புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து குழந்தைகளின் நலன்களையும் கருத்தில் கொண்டு பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளி அருகே கடைகளில் போதை பொருட்கள் விற்றால், அவற்றை உணவு பாதுகாப்பு துறையுடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள், பள்ளி இடைநிற்றல் குழந்தைகளைதொடர்ந்து கண்காணித்து கல்விக்கு அடித்தளமிடப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# பல்லடம் பகுதி கோவில்களில் தேய்பிறை சஷ்டி சிறப்பு வழிபாடு



பல்லடம், நவ.5

திருப்பூர்மாவட்டம்பல்லடம்வட்டாரத்தில்உள்ள முருகன் கோவில்களில் ஐப்பசி மாத தேய் பிறை சஷ்டியை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.

அதன்படி, பல்லடம் அருகே உள்ள மாதப்பூர் முத்துக்குமாரசுவாமி கோவில்ச சிறப்பு பூஜை நடைபெற்றது.

இதில் முத்துக்குமாரசுவாமிக்கு சந்தனம், பால், தயிர், தேன் உள்ளிட்ட 18 வகை வாசனைதிரவியங்களால், அலங்காரம் செய்யப்பட்டு அபிஷேகம் நடந்தது. பின்னர்சிறப்பு அலங்காரத்தில் முத்துக்குமாரசுவாமி அருள் பாலித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர்.

இதேபோல பல்லடம் காந்தி ரோட்டில் உள்ள பாலதண்டாயுதபாணி கோவில், அங்காளம்மன் கோவில், பச்சாபாளையம் மாகாளியம்மன் கோவில், பனப்பாளையம் மாரியம்மன் கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் உள்ள முருகப்பெருமானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள்கலந்துகொண்டு சுவாமியை வழிபட்டனர். இதில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# இச்சிப்பட்டி பாலம் அமைக்கும் பணியை ஊராட்சி தலைவர் ஆய்வு




பல்லடம், நவ.5

திருப்பூர்மாவட்டம்பல்லடம் அருகே உள்ள இச்சிப்பட்டி ஊராட்சி ரோசரி கார்டன் என்ற பகுதியில் நீர்வழி பாதையை அடைத்து தார் சாலை அமைக்கப்பட்டு இருந்தது. இதனைஆய்வுசெய்த இச்சிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வேலுமணி நீர்வழிப் பாதையை அடைக்காமல் பாலம் அமைத்து அதன் மீது சாலை அமைக்க வேண்டும் என அந்த பகுதியில் உள்ள ரியல் எஸ்டேட் உரிமையாளர்களிடம் அறிவுறுத்தினார்.

இதையடுத்து அந்தநீர்வழிப்பாதையில் பாலம் அமைக்க ரியல் எஸ்டேட் நிறுவனத்தினர் இச்சிப்பட்டி ஊராட்சியில் அனுமதி பெற்றனர். இந்த நிலையில் பாலம் அமைக்க, அதற்கான சிமெண்ட் குழாய்கள் கொண்டு வரப்பட்டது. சிமெண்ட் குழாய்களை இச்சிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் வேலுமணி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# உடுமலை பகுதி உணவகங்களில் தரமான உணவு வழங்க பொதுமக்கள் கோரிக்கை



உடுமலை, நவ.5

அறுஞ்சுவைகள் நிறைந்த உணவு கைக்கு அருகே இருந்தாலும் தூரத்தில் கிடைக்கும் மசாலாக்கள் கலந்த கம கம வாசனையுடன் கூடிய சிற்றுண்டிகளின்சுவைக்கு அடிமையாகாதோர் இல்லை என்றே சொல்லலாம்.

பல வகையான சிற்றுண்டிகள் இருந்தாலும் அவற்றில் முதலிடம் பிடிப்பது உடலுக்கு வலிமை தரும் காளான் சில்லி, பிரை, மஞ்சூரியன், தொக்கு என பல்வேறு வடிவங்களில் தயாராகி விற்பனைக்கு வரும் காளானை சுட சுட சுவைப்பதற்கு சைவ பிரியர்கள் தவமாய் தவம் இருக்கிறார்கள்.

ஆனால் உடுமலை பகுதியில் உள்ள உணவகங்களில் தயராகும் காளான் ப்ரையில் காளானை தேடும் நிலைமை காணப்படுகிறது. இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், உடுமலை பகுதியில் உள்ள ஒரு சில சிற்றுண்டி, தள்ளுவண்டி உணவகங்கள் பொதுமக்களை நூதன முறையில் ஏமாற்றுவதை வாடிக்கையாக கொண்டுள்ளது.

குறிப்பாக காளான் ப்ரை என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் உணவில் காளான்களே இருப்பது இல்லை. ஆசை ஆசையாய் விலை கொடுத்து வாங்கி காளான் ப்ரை சாப்பிட அமர்ந்தால் ப்ரை முடியும் வரையில் காளானே கிடைப்பதில்லை. மாறாக மசாலா, மாவு நிறைந்த முட்டைக்கோசின் ஆதிக்கமே காளான் ப்ரையில் உள்ளது.

ஒரு பாக்கெட் காளான் ரூ 45 முதல் ரூ 50 வரையிலும் கிடைக்கிறது.அதை கொண்டு மாவுகள், மசாலாக்களை அதிகளவில் கலந்து சுமார் நான்கு மடங்குலாபம்கிடைக்கும் அளவிற்கு ப்ரையை தயாரித்து விடுகின்றனர். இது முழுக்க முழுக்க பொதுமக்களை ஏமாற்றும் செயலாகும். விலைக்கு தகுந்த உணவை தரமாக கொடுப்பதற்கு மனது வருவதில்லை.

இதுகுறித்து உடுமலை பகுதியில் உள்ள உணவுத் துறையை சேர்ந்த அதிகாரிகளும் கண்டுகொள்வதில்லை. இதனால் பொதுமக்கள் விரும்பிய உணவில் விரும்பிய பொருள் இல்லாமல் ஏமாற்றத்தை சந்தித்து வருகின்றனர். எனவே உணவுத்துறை அதிகாரிகள் உடுமலை பகுதியில் ஆய்வு செய்து உணவகங்களில் தயாராகும் உணவுகளின் தரத்தையும் அது தயாரிக்க பயன்படும் எண்ணெய்யையும் ஆய்வு செய்ய வேண்டும்.

அத்துடன் தயாரிக்கப்படும் உணவில் சம்பந்தப்பட்ட உணவுப் பொருட்கள் இடம் பெற்றுள்ளதா? என்பதையும்உறுதிசெய்ய வேண்டும். மேலும் பொதுமக்களை ஏமாற்றும் வகையில் உணவை தயாரித்து விற்பனை செய்யும் நபர்கள் மீது பாரபட்சம் இல்லாமல் கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் முன்வர வேண்டும் என்று தெரிவித்தனர்.

# பா.ஜ.க. தேர்தல் பணி பயிலரங்கம்



உடுமலை, நவ.5

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் பாரதிய ஜனதா கட்சியின் பாராளுமன்ற தேர்தல் தயாரிப்பு பணி பொறுப்பாளர்கள் பயிலரங்கம் நிகழ்ச்சி நடந்தது.

இதில் கட்சியின் தமிழ் மாநில இணை பொறுப்பாளர் சுதாகர்ரெட்டி, மாநில செயலாளர் முருகானந்தம், மாநில பொது செயலாளர் சீனிவாசன் பாலகணபதி, மாநில அமைப்பு செயலாளர் கேசவ விநாயகம், திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் மங்களம் ரவி, பொதுச் செயலாளர் வடுகநாதன், மண்டல தலைவர்கள் கண்ணாயிரம், நாகமாணிக்கம், மாரியப்பன், பாலசுப்பிரமணியம், மடத்துக்குளம் பிரபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்ன செய்தியாளரிடம் சுதாகர் ரெட்டி கூறியதாவது: மக்கள் பாரதிய ஜனதா கட்சியை நம்புகிறார்கள். நடைபெற உள்ள 5 மாநில தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெறும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கலாம். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு அனைவரும் மக்களுக்காக செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர் மாவட்டத்தில் 6 மாதங்களில் ரூ.2.50 லட்சம் கோடிக்கு டிஜிட்டல் பணபரிவர்த்தனை: மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தகவல்

திருப்பூர், நவ.5

திருப்பூர் மாவட்டத்தில்நடப்புநிதியாண்டின் முதல் 6 மாதங்களில் 2 லட்சத்து 59 ஆயிரத்து 142 கோடி ரூபாய்க்கு டிஜிட்டல் பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. படித்தோர், படிக்காதோர் என யார்வேண்டுமானாலும், கையில் செல்போன் இருந்தால் போதும், மிக எளிதாக டிஜிட்டல் பண பரிவர்த்தனை மேற்கொள்ள முடிகிறது. இதனால் நேரம் மிச்சப்படுத்தப்படுவதுடன், பண பாதுகாப்பு, சில்லரை தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படுகிறது. இது டிஜிட்டல் பண பரிவர்த்தனை மீதான மக்களின் ஆர்வம் அதிகரிக்க முக்கிய அம்சமாக உள்ளன.

அந்த வகையில், டாலர் சிட்டி திருப்பூரில் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை அதிகரித்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான முதல் 6 மாதத்தில் மட்டும் திருப்பூர் மாவட்டத்தில் 2 லட்சத்து 59 ஆயிரத்து 142 கோடி ரூபாய்க்கு டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. இது குறித்து மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரவி கூறியதாவது:

பனியன் நகரான திருப்பூரில் வெளிமாவட்டம், வெளி மாநில மக்கள்லட்சக்கணக்கானோர் வசிக்கின்றனர். பொதுமக்கள், வர்த்தகர்கள் மத்தியில் டிஜிட்டல் பண பரிவர்த்தனை பயன்படுத்தும் ஆர்வம் அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் 2.59 லட்சம் கோடி ரூபாய்க்கு டிஜிட்டல் பணபரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. அதிகபட்சமாக பீம் மற்றும் யு.பி.ஐ., மூலமாக மட்டும் 1 லட்சத்து 59 ஆயிரத்து 812 கோடி ரூபாய்க்கு பரிவர்த்தனை நடந்துள்ளது. பீம் மற்றும் ஆதார் வாயிலாக 4,971 கோடி ரூபாய், பாரத் க்யூ.ஆர்., கோடு வாயிலாக 94.84 கோடி, ஐ.எம்.பி.எஸ்., மூலம் 90,423 கோடி, கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள் வாயிலாக 3,679 கோடி ரூபாய்க்கு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. இணையதளம் இல்லாத யு.எஸ்.எஸ்.டி., மூலம் 160 கோடி ரூபாய் பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. வரும் நாட்களில் பணமில்லா பரிவர்த்தனை மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருமூர்த்தி அணையில் இருந்து குளங்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்



உடுமலை, நவ.5

திருப்பூர் மாவட்டம் உடுமலை ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் 118 குளம், குட்டைகளும், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 74 குளங்களும் உள்ளன. மழைக்காலத்தில் மட்டுமே நீர் வரத்து இருக்கும். மற்றபடி இக்குளங்களே அப்பகுதி நிலத்தடி நீர் மட்டத்துக்கு, ஆதாரமாக விளங்குகிறது. கடந்த ஓராண்டுக்கும் மேலாக போதிய மழைப்பொழிவு இல்லாததால் அனைத்து குளங்களும் வறண்டு காணப்படுகிறது. கால்நடைகளின் குடிநீர் தேவைக்கு கூட குளங்களில் தண்ணீர் இல்லை. நீர் மட்டம் வெகுவாக சரிந்து தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழையும் தாமதித்து வருவதால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. இப்பிரச்னையை சமாளிக்க திருமூர்த்தி அணையில் இருந்து கிராமப்புற குளங்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டும் எனதொடர்ந்து விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்தில் ஒரு சுற்று மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டது. பிரதான கால்வாய் உடைப்பு உள்ளிட்ட காரணங்களால் பாசன காலம் நீட்டிக்கப்பட்டபோது ஆயக்கட்டு பகுதியிலுள்ள குளங்களுக்கு தண்ணீர் வழங்கப்படும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால் பாசன நிலங்களுக்கோ கூடுதல் திறப்பில் தண்ணீர் வழங்கப்படவில்லை. குளங்களையும் பொதுப்பணித்துறையினர் கண்டுகொள்ளவில்லை.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், இந்தாண்டு வறட்சியால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது.

தற்காலிக தீர்வாக குளங்களுக்கு தண்ணீர் வழங்கலாம். குளங்களில் தண்ணீரை தேக்கினால், பல மாதங்களுக்கு,

நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருக்கும். முதலாம் மண்டல பாசனத்துக்கு போதிய இடைவெளி இருப்பதால், ஆயக்கட்டு பகுதி மட்டுமல்லாது, பிற பகுதிகளிலுள்ளகுளங்களுக்கும் பாசன நீரை திருப்பி விட்டால் பயனுள்ளதாக இருக்கும் என்றனர்.

# மயில்களை பாதுகாக்க காப்பாளர் பணியிடம் உருவாக்க கோரிக்கை



உடுமலை, நவ.5

திருப்பூர் மாவட்டத்தில் உடுமலை, பல்லடம், தாராபுரம், அவிநாசி, ஊத்துக்குளி போன்ற சுற்றுவட்டார பகுதிகளில் மயில்கள் பரவலாக காணப்படுகின்றன. அவ்வப்போது இறைச்சி மற்றும் தோகைக்காக, மயில்கள்வேட்டையாடப்பட்டு வந்தது. இந்நிலையில் விளைநிலங்களில் வலம் வரும் மயில்களை தடுக்க, மருந்து, விஷம் வைக்கும் பணியில் சிலர் ஈடுபடுகின்றனர். எனவே, மயில்களால் இடையூறு ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து, அந்த இடத்தில் சேதத்தை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம், மயில்கள் ஆண்டு முழுவதும் விளைநிலங்களில் உள்ள பயிர்களை சேதப்படுத்துவது கிடையாது. மாறாக, நாற்று நடும் காலம், விதைப்பு காலம் அல்லது அறுவடை காலம் எப்போது என்பதை தெரிந்து, மயில்களை விரட்டும் முயற்சியை துரிதப்படுத்த வேண்டும்.

இது குறித்து தன்னார்வலர்கள் கூறும்போது, மாவட்டத்தில் மயில்கள் சுற்றித்திரியும் புதர்காடுகள்மற்றும்பரந்த நிலப்பரப்புகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன. மயில்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுவதால், எஞ்சிய பாதுகாக்கப்பட்ட வனங்கள், விளைநிலங்களில் மட்டுமே, அவை காணப்படுகின்றன. வனத்துறையினர், தன்னார்வலர்களை உள்ளடக்கிய கண்காணிப்பு குழு அமைத்தோ, மயில் காப்பாளர் எனும் புதிய பணியிடத்தை உருவாக்கியோ, அவைகளை பாதுகாக்க முன் வர வேண்டும். அப்போது தான், வேளாண் பயிர் சாகுபடியையும் பாதுகாக்க முடியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பல்லடத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு பேரணி



பல்லடம், நவ.5

தமிழ் நாட்டில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சார்பில் அக்டோபர் 30 முதல் நவம்பர் 5ந்தேதி வரை ஊழல் தடுப்பு வாரம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி திருப்பூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சார்பில் ஊழல் தடுப்புத்துறை துணை கண்காணிப்பாளர் தட்சிணாமூர்த்தி அறிவுறுத்தலின் பேரில் ஆய்வாளர் சசிலேகா தலைமையில் பல்லடம் அரசு பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்ற ஊழல் மறுப்போம், தேசத்தை காப்போம் என்ற பெயரில் விழிப்பு ணர்வு பேரணி நடைபெற்றது. பல்லடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இருந்து தொடங்கிய இந்த பேரணி பஸ் நிலையம் மற்றும் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் அரசு மேல்நிலைப்பள்ளியை வந்தடைந்தது. இதில் பல்லடம் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசு மற்றும் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

# காரணம்பேட்டையில் கல்குவாரி தொழிலாளர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம்



பல்லடம், நவ.5

திருப்பூர்மாவட்டம்பல்லடம் அருகே உள்ள காரணம்பேட்டையில் கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சங்கம், காரணம்பேட்டை ராக் சிட்டி ரோட்டரி சங்கம், திருப்பூர் மாநகராட்சி நடமாடும் தொழிலாளர்கள் மருத்துவமனை ஆகியவை இணைந்து கல்குவாரி தொழிலாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை நடத்தியது.

இதற்கு திருப்பூர் மாவட்ட கல்குவாரி உரிமையாளர்கள் சங்க செயலாளர் சிவக்குமார் தலைமை தாங்கினார். காரணம்பேட்டை கல் குவாரி சங்க தலைவர் குணசேகர் முன்னிலை வகித்தார். செயலாளர் தேவராஜ் வரவறே்று பேசினார். கல்குவாரி தொழிலாளர்களுக்கு டாக்டர் அபிராமி தலைமையிலான மருத்துவக் குழுவினர் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர்.

இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்கலந்துகொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர்.நிகழ்ச்சியில் கல்குவாரி சங்க துணைத் தலைவர் பிரகாஷ் மற்றும் சந்திரசேகர், நடராஜ், மற்றும் கல்குவாரி தொழிலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தொற்று நோய் பரவாமல் தடுக்க திடக்கழிவுகளை அகற்ற வேண்டும்: நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் உத்தரவு



திருப்பூர், நவ.5

வடகிழக்குபருவமழை தொடங்கி உள்ள நிலையில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. சாலையில் உள்ள கால்வாய்,வீடுகளின்இடையே உள்ள சாக்கடை அடைப்பால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மழைநீர் வீடுகளுக்குள் புகும் அபாயம் பல இடங்களில் காணப்படுகிறது. மழைக்கால பாதிப்புகளை எதிர்கொள்ள உள்ளாட்சி நிர்வாகத்தினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என தமிழக அரசும் அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தூய்மைப்பணி குறித்து, நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர், அனைத்து நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில், மழைக்காலங்களில், தொற்றுநோய் பரவாத வகையில் திடக்கழிவுகளை உடனுக்குடன் அகற்றி, உள்ளாட்சி பகுதிகள் தூய்மையுடன் பராமரிக்கப்பட வேண்டும். சுகாதாரப்பணி மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் வாயிலாக தூய்மை பணியாளர்களுக்கு அனைத்து பாதுகாப்பு உபகரணங்களும் தடையின்றி கிடைப்பதை கண்காணிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023



## முத்தையா சாருக்காகதான் இந்த படத்தில் நடித்தேன்: ஸ்ரீ திவ்யா

இயக்குனர் கார்த்தி இயக்கத்தில் ஆக்ஷன் த்ரில்லராக உருவாகியுள்ள திரைப்படம் 'ரெய்டு'. இந்த படத்தில் விக்ரம் பிரபு கதாநாயகனாக நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக ஸ்ரீ திவ்யா நடித்துள்ளார். மேலும், அனந்திகா, ரிஷி ரித்விக், சவுந்தரராஜா மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

எஸ்.கே. கனிஷ்க் மற்றும் ஜிகே ஆகியோர் தயாரித்துள்ள இந்த படத்திற்கு சாம் சிஎஸ் இசையமைத்துள்ளார். இப்படத்திற்கு இயக்குனர் முத்தையா வசனம் எழுத கதிரவன்ஒளிப்பதிவுசெய்துள்ளார்.'ரெய்டு'திரைப்படம்10ஆம்தேதிதிரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் நடிகர் விக்ரம் பிரபு பேசியதாவது, நெகட்டிவிட்டியை வைத்துதான் இந்தப் படம் உருவாக்கியுள்ளோம். நல்ல கதைகளைதான் தேர்ந்தெடுப்பேன். இது கொஞ்சம் கமர்ஷியல் படம். எனக்கு ஆக்ஷன் பிடிக்கும். அதை கமர்ஷியலாக சில விஷயங்கள் எனக்காக சேர்த்து முயற்சி செய்து கொண்டு வந்துள்ளோம். ஸ்ரீதிவ்யாவை பல வருடங்கள் கழித்து சந்தித்துள்ளேன். இயக்குனர் கார்த்தி, வேலு பிரபாகரன் சார் என அனைவருடனும் வேலை பார்த்தது மகிழ்ச்சி. நான் லீனியர் முறையில்தான் ரெய்டு கதை எழுதப்பட்டுள்ளது. படத்தின் விஷூவலுக்காக இசையை சாம் சூப்பராக கொடுத்துள்ளார் என்றார்.

நடிகை ஸ்ரீ திவ்யா பேசியதாவது, 'ரெய்டு' படம் நான் முத்தையா சாருக்காகதான் நடித்தேன். 'மருது' படத்தில் எனக்கு அருமையான கதாபாத்திரம் முத்தையா கொடுத்தார். விக்ரம் பிரபுவுடன் வேலை பார்த்தது மகிழ்ச்சி. அனைவருக்கும் வாழ்த்துகள் என்றார்.

## தமிழ் சினிமாவின் முதல் கருப்பு ஹீரோ.. வெளியானது ஜிகர்தண்டா2 டிரைலர்



கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள திரைப்படம் 'ஜிகர்தண்டா 2'.

இந்த படத்தில் எஸ்.ஜே. சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. தமிழ் சினிமாவின் முதல் கருப்பு ஹீரோ போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த டிரைலரை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். 'ஜிகர்தண்டா 2' திரைப்படம் வருகிற 10ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

## டிவியில் வெளியாகும் விஜய்சேதுபதி படம்



புகழ்பெற்ற திரைப்பட இயக்குனர் சந்தோஷ் சிவன் இயக்கத்தில் உருவான திரைப்படம் 'மும்பைகர்'. இப்படம் லோகேஷ் கனகராஜ் இயக்கிய 'மாநகரம்' படத்தின் அதிகாரப்பூர்வ ரீமேக் ஆகும். இதில் விஜய் சேதுபதி, விக்ராந்த் மாசே, ஹிருது ஹாரூண், ரன்வீர் ஷோரே, தன்யா மானிக்தலா, சஞ்சய் மிஸ்ரா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஜோதி தேஷ்பாண்டே மற்றும் ரியா ஷிபு ஆகியோர் இந்தத் திரைப்படத்தைத் தயாரித்துள்ளனர்.

மும்பையின்பரபரப்பானதெருக்களின்பின்னணியில் அமைக்கப்பட்ட 'மும்பைகர்' திரைப்படம் பல்வேறு தொடர்பற்ற கதாபாத்திரங்களின் வாழ்க்கையை பின்னிப்பிணைத்து சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. 24 மணி நேர காலகட்டத்தில் நடக்கும் பல நிகழ்வுகளை திடீரென ஒன்றிணைக்கும் முக்கிய கதாபாத்திரங்களின் பயணத்தை படம் விவரிக்கிறது.

இந்நிலையில், 'மும்பைக்கர்' திரைப்படம் முதல் முறையாக நவம்பர் 5ஆம் தேதி பிற்பகல் 2 மணிக்கு கலர்ஸ் தமிழ் தொலைக்காட்சியில் வெளியாகவுள்ளது.

இப்படம்குறித்துநடிகர்விஜய்சேதுபதிபேசியதாவது, இந்திய நடிகர்களுக்கு இது ஒரு உற்சாகமான நேரமாக இருக்கிறது.பல்வேறுமொழிப்படங்களில்பணியாற்றும் வாய்ப்புகள் எங்களுக்கு வருகின்றன. வெப் சீரிஸில் நான் நடித்ததற்காக மக்களின் அன்பு, பாராட்டுகளை பெற்றுள்ளேன். இந்த திரைப்படம் எனது முதல் இந்தி திரைப்பட அறிமுகமாக அமைந்துள்ளது. இப்படம் தமிழில் வெளியாவதன் மூலம் தமிழ் ரசிகர்கள் இப்படத்தை விரும்புவார்கள் மற்றும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன் என்றார்.

## இசை பயணத்தில் நான் சென்று சேரும் இடம் இளையராஜாவின் பாதங்களே மிஷ்கின்



சவரக்கத்தி திரைப்படத்தை இயக்கிய இயக்குனர் ஆதித்யா இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'டெவில்'. இந்த படத்தில் விதார்த், பூர்ணா, ஆதித் அருண், சுபஸ்ரீ ராயகுரு மற்றும் மிஷ்கின் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். மாருதி பிலிம்ஸ் மற்றும் டச் ஸ்கிரீன் என்டர்டெயின்மென்ட் சார்பில் எஸ். ராதாகிருஷ்ணன் மற்றும் எஸ்.ஹரி இணைந்து தயாரித்துள்ளஇப்படத்திற்குமுதன்முறையாக இயக்குனர் மிஷ்கின் இசையமைத்து இருக்கிறார். இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது.

இதில் இயக்குனர் மிஷ்கின் பேசியதாவது, "எல்லாக் கதைகளும் ஒரே கதைகள் தான், "டெவில்" படத்தின் கதையும் அதே தான். ஒரு அமைதியான வீட்டிற்குள் கருப்பு உள்ளே வரும். வீடு சின்னாபின்னமாகி சிதிலம் அடையும், மீண்டும் அது புத்துயிர் பெற்று துளிர்க்கும். அன்னா கரீனா தொடங்கி எல்லாவற்றிலும் கதை இதுதான். நான் கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்தவன் அல்ல; ஆனால் பைபிளை பலமுறை படித்திருக்கிறேன். இப்பொழுதும் இயேசு கிறிஸ்து என் பின்னால் நிற்பதைப் போல் உணர்கிறேன். நானும் சிலுவையில்தொங்குபவன்தான்.இப்படத்தில்சிலபாடல்களைமுயற்சித்து இருக்கிறேன்.

ஒரு எட்டு வயதாக இருக்கும் போது என் தந்தையின் தோள்களில் அமர்ந்து சவாரி செல்லும் போது, 'அன்னகிளியே உன்னத் தேடுதே...' பாடலைக் கேட்டு என் அப்பனின் தலைமுடியைப் பற்றி இழுத்து நிறுத்தி அப்பாடலைக் கேட்டேன். அன்று முதல் இளையராஜா எனக்கு குருநாதர் தான். பின்னர் ஏன் இசையமைக்க வந்தாய் என்று கேட்கிறீர்களா..? அவருடன் சண்டை போட்டுவிட்டேன்.. எனக்கு கொஞ்சம் கோபம் அதிகமாக வரும். மீண்டும் அவரிடம் போய் நிற்க முடியாது. மேலும் மிகவும் போர் அடிக்கிறது. என்ன செய்வது என்றே தெரியவில்லை. அதனால் தான் இசையமைக்க முடிவு செய்தேன். இந்த இசை பயணத்தின் மூலம் நான் எந்த இடத்திற்கும் சென்று சேர விரும்பவில்லை. அப்படி நான் சென்று சேரும் இடம் என்று ஒன்று இருக்குமானால் அது இளையராஜாவின் காலடிகள்தான். இந்த உலகின் மிகப்பெரும் இசை ஆளுமைகள் இளையராஜாவும் ஏ.ஆர்.ரஹ்மானும். அவர்கள் தான் இசையமைப்பாளர்கள். நான் அல்ல. .சினிமாவில் சிலர் கூறுவார்கள் அதிர்ஷ்டத்தால் ஜெயித்து விட்டான் என்று. இவர்களைப் பொறுத்தவரை சோவிகளை குலுக்கிப் போட்டால் உடனே தாயம் விழுந்துவிடும், பூவா தலையா என்று சுண்டினால் உடனே பூ விழுந்து விடும் என்று நினைக்கிறார்கள். வெற்றி அவ்வளவு எளிதானது அல்ல. தன் வாழ்நாள் முழுக்க, 24 மணி நேரமும் சினிமா, சினிமா, சினிமா என்று ஓடிக் கொண்டிருக்கும் மகத்தான இயக்குனர்அல்ல, மகத்தானகலைஞன்அவன். அவன்தான்என்நண்பன்வெற்றிமாறன். அவனுக்கு கிடைத்த வெற்றிக்கு முழுமுதற் காரணம் அவனது அசராத உழைப்பும் ஆழ்ந்த அறிவும் தான்.

ஒரு படம் இயக்குனரின் உழைப்பும் அறிவும் வெளிப்படையாக தெரிவது போல் இருந்தால்மட்டுமேஅப்படம்ஓடும். இல்லைஎன்றால்அதுஎப்பேர்ப்பட்டதிரைப்படமாக இருந்தாலும் ஓடாது. அதை மக்கள் நிராகரித்து விடுவார்கள். படத்தை பாருங்கள். அது உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் தூக்கிப் போடுங்கள். அவன் மீண்டும் அதைவிட நல்லகதையோடு உங்களைத் தேடி வருவான். படம் நன்றாக இருந்தால் கொண்டாடுங்கள், ஆதரவு தாருங்கள் என்று பேசினார்.

## நரச்ச நெத்தி முடி மயக்குதயா.. விக்ரமை வர்ணிக்கும் ரித்து வர்மா



விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்துள்ளார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன்உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இதையடுத்து சமீபத்தில் இப்படம் நவம்பர் 24ஆம் தேதி ரிலீஸாக உள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'நரச்ச முடி' பாடலின் லிரிக் வீடியோ வெளியாகியுள்ளது. விக்ரமை ரித்து வர்மா வர்ணிப்பது போன்று உருவாகியுள்ள இந்த பாடலை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.

## கமல்ஹாசனா.. ரஜினியா.. யார் ஜெயிக்கிறானு பாப்போம்



'குலேபகாவலி', 'ஜாக்பாட்' , 'கோஸ்டி' போன்ற படங்களை இயக்கிய கல்யாண் தற்போது இயக்கியுள்ள திரைப்படம் '80ஸ் பில்டப்'. இதில் சந்தானம் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ராதிகா பிரீத்தி நடிக்கிறார். மேலும், கே.எஸ்.ரவிகுமார், ஆனந்த் ராஜ், மன்சூர் அலிகான், மொட்டை ராஜேந்திரன், மனோபாலா, மயில்சாமி, முனீஸ்காந்த், கூல் சுரேஷ் உட்பட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஸ்டூடியோகிரீன்தயாரித்துள்ளஇப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். ஜாக்கப் ரத்னராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். 80களில் நடக்கும்இந்தப்படத்தின்கதை, பேன்டசிடிராமாவாகஉருவாகியுள்ளது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்நிலையில், இப்படத்தின் டீசர் வெளியாகியுள்ளது. காமெடியாக உருவாகியுள்ள இந்த டீசர் ரசிகர்களின் கவனம் ஈர்த்து அதிக லைக்குகளை குவித்து வருகிறது.

## 33 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா வெற்றி



உலகக் கோப்பை தொடரின் 36வது லீக் போட்டியில் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்தின. அகமதாபாத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் இங்கிலாந்து அணி டாஸ் வென்று முதலில் பந்துவீச முடிவு செய்தது.

அதன்படிஆஸ்திரேலியாஅணியின்துவக்கவீரர்களான ஹெட் மற்றும் டேவிட் வார்னர் முறையே 11 மற்றும் 15 ரன்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர். இதையடுத்துகளமிறங்கியஸ்மித்44ரன்களைகுவித்தார். ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்த போதிலும், லபுசேன் பொறுமையாக விளையாடி ரன் குவித்தார். இவர் 71 ரன்களில் ஆட்டமிழந்தார். பிறகு களமிறங்கிய கிரீன் 47 ரன்களையும், மார்கஸ் ஸ்டோய்னிஸ் 35 ரன்களையும் எடுத்தநிலையில், 49.3 ஓவர்களில் ஆஸ்திரேலியாஅணி 286 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. 287 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு துவக்க வீரரான பேர்ஸ்டோ ரன் ஏதும் எடுக்காமல் அவுட் ஆகி அதிர்ச்சி அளித்தார். இவருடன் களமிறங்கிய டேவிட் மலான் பொறுமைாக ஆடி 50 ரன்களை எடுத்து, அவுட் ஆனார். இவருடன் விளையாடிய ஜோ ரூட் 13 ரன்களில் ஆட்டமிழக்க, அடுத்த வந்த பென் ஸ்டோக்ஸ் நிலைத்து நின்று ஆடி பொறுமையாக ரன்களை சேர்த்தார். இவரும் 64 ரன்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி தடுமாறியது. இந்த நிலையில், களமிறங்கிய கேப்டன் பட்லர் 1 ரன்னில் அவுட் ஆனார்.

பிறகு வந்த மொயின் அலி 42 ரன்களில் ஆட்டமிழக்க, அடுத்த வந்த வீரர்கள் அனைவரும் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இந்நிலையில், 48.1 ஓவர் முடிவில் இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட் இழப்பிற்கு 253 ரன்கள் எடுத்து தோல்வியை சந்தித்தது. இதன்மூலம், ஆஸ்திரேலிய அணி 33 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றிப்பெற்றது.

## டி.எல்.எஸ். முறையில் 21 ரன்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி



உலக கோப்பை கிரிக்கெட் தொடரின் 35வது லீக் போட்டி பெங்களூருவில் இன்று நடைபெறுகிறது. இதில் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது.

இதனால் நியூசிலாந்து அணி முதலில் பேட்டிங் ஆட களமிறங்கியது. அந்த அணியின் துவக்க வீரர்களாக கான்வே மற்றும் ரச்சின் ரவீந்திரா களமிறங்கினர். இந்த ஜோடி 68 ரன்களை சேர்த்த போது, கான்வே 35 ரன்களில் அவுட் ஆனார். இதைத் தொடர்ந்து களமிறங்கிய கேப்டன் கேன் வில்லியம்சன் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பிறகு ரச்சின் ரவீந்திராவுடன் இணைந்து கொண்ட வில்லியம்சன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த இருவரும் அரைசதம் அடித்தனர். கேன் வில்லியம்சம் 95 ரன்களில் தனது விக்கெட்டை பறிக்கொடுத்தார். ரச்சின் ரவீந்திரா 108 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். இவரை தொடர்ந்து களமிறங்கிய டேரில் மிட்செல் மற்றும் மார்க் சாப்மென் முறையே 29 மற்றும் 39 ரன்களை எடுத்தனர்.

இதன் மூலம் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 401 ரன்களை குவித்தது. இதை அடுத்து 402 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை பாகிஸ்தான் துரத்தியது.

பாகிஸ்தான் அணியின் துவக்க வீரரான அப்துல்லா ஷஃபிக் 4 ரன்களில் அவுட் ஆக, இவருடன் களமிறங்கிய ஜமான் 81 பந்துகளில் 126 ரன்களை குவித்தார். இவருடன் ஜோடி சேர்ந்து ஆடிய கேப்டன் பாபர் அசாம் 66 ரன்களை எடுத்தார். 25.3 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 1 விக்கெட் இழப்புக்கு 200 ரன்களை குவித்த நிலையில், மழை குறிக்கிட்டது. தொடர்ந்து மழை பெய்த காரணத்தால் போட்டி பாதியில் நிறுத்தப்பட்டது. எனினும், டி.எல்.எஸ். விதிகளின் படி பாகிஸ்தான் அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## ஐ.பி.எல்.லில் ரூ.41 ஆயிரம் கோடி முதலீடு செய்ய சவுதி அரேபியா விருப்பம்

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டித்தொடர் இந்தியாவில் 2008ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்டு தோறும் இப்போட்டி தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

இதுவரை 16 சீசன்கள் நடந்து உள்ளது. ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெற்றுள்ள ஐ.பி.எல். தொடர் மிகப்பெரிய வர்த்தகமாக விளங்குகிறது. அதன் மதிப்பும் அதிகமாகி வருகிறது.

இந்த நிலையில் ஐ.பி.எல்லில் முதலீடு செய்ய சவுதி அரேபியா விருப்பம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா கால்பந்து மற்றும் கோல்ப் உள்ளிட்ட விளையாட்டுகளில் முதலீடுகளை செய்து உள்ளது. இதற்கிடையே சவுதி அரேபியா நாட்டின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் ஆலோசகர்கள், ஐ.பி.எல். அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்த கட்டமைப்பை 30 பில்லியன் டாலர் (ரூ.2.5 லட்சம் கோடி) மதிப்புள்ள ஹோல்டிங் நிறுவனமாக மாற்றுவது குறித்து ஆலோசனை வழங்கியுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் முகமது பின் சல்மான் இந்தியாவுக்கு வந்த போது, ஐ.பி.எல். நிறுவனத்தில் முதலீடு செய்வது குறித்து பேசப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த முதல்கட்ட பேச்சுவார்த்தையில் சவுதி அரேபியா அரசு இங்கிலீஷ் பிரீமியர் லீக் அல்லது ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக்கைப் போலவே, ஐ.பி.எல். அமைப்பில் சுமார் 5 பில்லியன் டாலரை (ரூ.41 ஆயிரம் கோடி) முதலீடு செய்ய தயாராக உள்ளதாக தெரிவித்து ஐ.பி.எல். கட்டமைப்பை மற்ற நாடுகளுக்கு ஐ.பி.எல். கிரிக்கெட்டை விரிவாக்கம் செய்வதற்கு உதவும் வகையில், பில்லியன் டாலர் முதலீடு செய்ய சவுதி தயாராக இருப்பதாக பேச்சுவார்த்தையின்போது தெரிவிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சவுதி அரேபியா அரசு ஐ.பி.எல். அமைப்பில் 5 பில்லியன் டாலர் முதலீடு செய்ய தயாராக இருப்பதாக முடிவு செய்தாலும், மத்திய அரசும், இந்திய கிரிக்கெட் வாரியமும் முடிவு எடுக்க செய்ய வேண்டும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.